①

செ.வெ.எண்-281 இந்திய தேர்தல் ஆணையம் நாள் - 13-05-2016

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி – 110 001

எண் 3/4/ID/2016/SDR–Vol. 1 நாள் 02.05.2016

## ஆணை

1. உண்மையான வாக்காளர்கள் 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 62–ஆம் பிரிவின் கீழ் அவர்களுடைய உரிமையை மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்காக, வாக்காளர்கள், ஆள்மாறாட்டம் செய்யப்படுவதைத் தடுக்கிற நோக்கத்துடன், 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச்சட்டத்தின் 61–ஆம் பிரிவு வழிவகை செய்துள்ளதால், வாக்குப்பதிவின்போது, வாக்காளர்கள் தங்களுடைய அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஒரு வழியாக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையைப் பயன்படுத்துவதற்காக அச்சட்டத்தின் கீழ் விதிகள் மூலம் வழிவகைகள் செய்யப்படலாம் என்பதாலும்,

2. வாக்குப்பதிவு நடைபெறுகிறபோது, வாக்காளர்கள் ஆள்மாறாட்டம் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், அவர்களுடைய அடையாளத்தை உறுதி செய்ய உதவுவதற்காகவும் மாநில அரசின் செலவில் வாக்காளர்களின் புகைப்படங்கள் அடங்கிய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை, வாக்காளர்களுக்கு வழங்குமாறு உத்தரவிடுவதற்கு, 1960–ஆம் ஆண்டு வாக்காளர் பதிவு விதிகளின் 28–ஆம் விதி தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரமளித்துள்ளதாலும்,

3. 1961–ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளின் 49H (3) மற்றும் 49K (2) (b) ஆகிய விதிகள், 1960–ஆம் ஆண்டு வாக்காளர் பதிவு விதிகளின் 28–ஆம் விதியின் மேற்சொன்ன விதித்துறைகளின் கீழ், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள தொகுதி ஒன்றின் வாக்காளர்கள், வாக்குச்சாவடியில், தங்களுடைய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும். அந்த வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அவர்கள்

அளிக்கத் தவறுகிற அல்லது அளிக்க மறுக்கிற நேர்வில், அவர்கள் வாக்களிக்க அனுமதி மறுக்கப்படலாம் என்பதாலும்; மற்றும்

4. மேற்சொன்ன சட்டம் மற்றும் விதிகளின் மேற்சொன்ன விதித்துறைகளை ஒருங்கிணைந்த முறையிலும் ஒத்திசைவான முறையிலும் படிக்கிறபோது, வாக்காளர் பட்டியலில் பெயர் இருப்பதன் மூலம் வாக்களிப்பதற்கான உரிமை எழுகிறபோதிலும், வாக்குப்பதிவின்போது வாக்காளர்கள் தங்களுடைய அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஒரு வழியாக மாநில அரசின் செலவில் தேர்தல் ஆணையம் வழங்குகிற வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை பயன்படுத்தப்படுவதையும் அது சார்ந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. மேலும், அவையிரண்டும் ஒன்றாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாலும், மற்றும்

5. காலவரையறை நிர்ணயிக்கப்பட்ட திட்டம் ஒன்றின்படி, அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு, தேர்தல் ஆணையம், 28.08.1993 அன்று ஆணை ஒன்றை வெளியிட்டுள்ளதாலும், மற்றும்

6. நமது நாட்டில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதாலும்; மற்றும்

7. "நடைபெறவிருக்கின்ற பொதுத் தேர்தலில் +அனுமதியளிக்கப்பட்ட புகைப்பட வாக்காளர் சீட்டு", வாக்குப்பதிவு நாளுக்கு முன்னதாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளதாலும்

8. எனவே தற்போது தொடர்புடைய அனைத்து காரணங்களையும், சட்டபூர்வ மற்றும் உண்மையான நிலையையும் கணக்கில் எடுத்துக்கொண்ட பின்னர், இந்திய தேர்தல் ஆணையம், 22.04.2016 அன்று அறிவிக்கையிடப்பட்டுள்ள, நடைபெவிருக்கின்ற பொதுத் தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள்

அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்கவேண்டும் என இதனால் உத்தரவிடுகிறது. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத அத்தகைய வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக, பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனுமொன்றை அளிக்க வேண்டும்.

(i) கடவுச்சீட்டு;

(ii) ஓட்டுநர் உரிமம்;

(iii) மத்திய / மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களால் / வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்;

(iv) வங்கி / அஞ்சலக கணக்குப் புத்தகங்கள் (புகைப்படத்துடன் கூடிய) ;

(v) நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN card);

(vi) தேசிய மக்கள்தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை;

(vii) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அட்டை;

(viii) தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு ஸ்மார்ட் அட்டை;

(ix) புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்

(x) தேர்தல் நிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட அனுமதியளிக்கப்பட்ட வாக்காளர் புகைப்படச்சீட்டு மற்றும்;

(xi) பாராளுமன்ற/சட்டமன்ற/சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கபட்டடுள்ள அலுவலக அடையாள அட்டை

9. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையால் வாக்காளரின் அடையாளம் மெய்ப்பிக்கப்படுகின்றபோது, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையிலுள்ள அச்சுப்பிழைகள் / எழுத்துப் பிழைகள் முதலியவற்றை பொருட்படுத்த தேவையில்லை. மற்றொரு

சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்டுள்ள வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை, வாக்காளர் ஒருவர் அளிப்பாராயின், அந்த வாக்காளர் வாக்களிப்பதற்காக வந்துள்ள வாக்குச்சாவடியின் வாக்காளர் பட்டியலில் அவரின் பெயர் இடம் பெற்றிருக்குமாயின், அத்தகைய வாக்காளர் புகைப்பட அட்டைகளையும் ஏற்றுக் கொள்ளலாம். புகைப்படம் பொருந்தாததால் வாக்காளரின் அடையாளத்தை மெய்ப்பிக்க இயலாத நேர்வில், வாக்காளர், மேலே பத்தி 8ல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்று புகைப்பட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை அளிக்க வேண்டும்.

10. மேலே பத்தி 8ல் என்ன சொல்லியிருப்பினும், 1950–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 20A–ஆம் பிரிவின் கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள், அவர்களின் கடவுச்சீட்டிலுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் அசல் கடவுச்சீட்டின் அடிப்படையில் மட்டுமே (வேறெந்த அடையாள ஆவணமும் அல்லாது) அவர்களின் அடையாளம் வாக்குச்சாவடியில் மெய்ப்பிக்கப்பட வேண்டும்.

/ ஆணைப்படி /

(அனுஜ் ஜெய்பூரியார்)
செயலாளர்
இந்திய தேர்தல் ஆணையம்

தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.
நாள்: 06.05.2016

ராஜேஷ் லக்கானி
தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மை நகல்/

6/5/16.
பிரிவு அலுவலர்

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்